பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 13 ஞாயிற்றுக்கிழமை (27.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 181

# இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியாவின் தலையீடும் ஆதரவும் அவசியம்

## சென்னை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் அமைச்சர்கள் ஹக்கீம், அமீர் அலி வலியுறுத்து





சென்னை,மே27

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் தலையீடும் ஆதரவும் தேவை.**

**இனப்பிரச்சினைக்கு இலங்கையில் வாழும் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வைக் காண இந்தியா உதவவேண்டும்.**

**இவ்வாறு இலங்கையைச் சேர்ந்த அமைச்சர்களான ரவூப் ஹக்கீமும், எம்.எஸ்.அமீர் அலியும் தெரிவித்தனர்.**

அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஏழாவது மாநாடு சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

அங்கு பேசுகையிலேயே, இலங்கையின் இருஅமைச்சர்களும் மேற்கண்டவாறு வற்புறுத்தினர்.

தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் இலங்கை முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர். அனர்த்த நிவாரண சேவை அமைச்சர் எம்.எஸ். அமீர் அலி தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்.

எனினும் அவர்கள் இருவரும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா உதவவேண்டும் என்ற கருத்தை ஒரு குரலில் வெளியிட்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் போது முஸ்லிம்மக்களின் அரசியல் அபிலாசைகளும் அவர்களது பரிமாணமும் கருத்தில் எடுக்கப்படவேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இரண்டு அமைச்சர்களும் திருப்தி வெளியிட்டனர்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைகள், இலங்கையில் இருந்து அகதிகள் தமிழகம் வந்துசேர்வது ஆகிய பிரச்சினைகளை மாறி மாறி தொடர்ந்து எதிர்நோக்கவேண்டியிருந்த போதிலும் - இலங்கைக்கு உதவுவதற்கு இந்திய அரசு அக்கறை காட்டுவது பாராட்டுக்குரியது. - என்று இரு அமைச்சர்களும் தெரிவித்தனர்.

அமைச்சர் அமீர் அலி பேசுகையில்-

இலங்கை முஸ்லிம்கள் வடக்கு - கிழக்கின் பிரிக்க முடியாத பங்காளிகளாக நீண்டகாலம்வாழ்ந்தனர். ஆயினும் கடந்த இருபது வருடங்களாக அவர்களின் உரிமைகளும் சுதந்திரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றன - என்று தமது பேச்சின் ஒரு கட்டத்தில் கூறினார்.

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் ஈழத்து முஸ்லிம்கள் ஆற்றிய பணிகளை இரண்டு அமைச்சர்களும் தமது உரைகளின் போது எடுத்துரைத்தனர்.

அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், தமிழக நிதி அமைச்சர் கே. அன்பழகன், வர்த்தகத்துறை அமைச்சர் என். எம். உலயத்துல்லா, மலேசிய அமைச்சர்கள் டற்றோ ஸ்ரீ.பழனிவேல் மற்றும் டற்றோ முகம்மது இக்பால் ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

## சாவகச்சேரித் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மே27

தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக சாவகச்சேரியில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கித் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொலையுண்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து தென்மராட்சியில் நேற்று முழுநாளும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஊரடங்கு நேரத்தில் பிரதான வீதிகளில் நடமாட்டம் இருக்கவில்லை. எனினும் உள்ளே ஒழுங்கைகளை அண்டிய பகுதிகளில் மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. கடைகள், சந்தைகள் அப்பகுதிகளில் இயங்கின.

படையினரின் ரோந்து நடவடிக்கைகள் நேற்று மும்முரமாக நடைபெற்றன. தேடுதல் நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. (அ-1-207)

## தென்மராட்சியில் ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம்,மே27

தென்மராட்சியில் நேற்று முழுநாளும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை நீக்கப்படுவதாக யாழ். பொலீஸார் தெரிவித்தனர்.

மேலும் குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மாலை 8 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் எனவும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## 'சிற்றிலிங்' தொலைபேசி இணைப்பு வழங்கும் பணி தாமதமாகும்

யாழ்ப்பாணம்,மே27

குடாநாட்டில் 'சிற்றிலிங்' சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளை வழங்கும் பணி தாமதமாகும்.

'ரெலிக்கொம்' நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்) வி.யோகேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

சி.டி.எம்.ஏ. இணைப்பை வழங்குவதற்கான தொலைபேசி ஒவ்வொன்றையும்18 ஆயிர்த்து 400 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு முன்னர் ஏற்பாடாகியிருந்தது.

எனினும் இப்போது 12ஆயிரம்.ரூபாவுக்கு கொள்வனவு செய்யக்கூடிய சாதகமான நிலை உருவாகியுள்ளது.

அந்த வகை சார்ந்த தொலைபேசிகளைக் கொள்வனவு செய்வதற்குக் காலதாமதம் ஏற்படும். அவற்றை பெற்றுக்கொண்ட பின்னரே தொலைபேசி இணைப்புக்களை வழங்கமுடியும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (1)

## நெடுந்தீவுக்கான போக்குவரத்து 3ஆவது நாளாக நேற்றும் தடைப்பட்டது

யாழ்ப்பாணம்,மே27

நெடுந்தீவுக்கான போக்குவரத்து மூன்றாவது நாளாக நேற்றும் தடைப்பட்டிருந்தது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலையில் நெடுந்தீவு தென்கிழக்குப் பகுதியில் உள்ள குயின்ரவர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கடற்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து நேற்றுடன் மூன்று தினங்களாக நெடுந்தீவுக்கான பயணச் சேவை துண்டிக்கப்பட்டது.

போக்குவரத்துச் சேவை துண்டிக்கப்பட்டதை அடுத்து நெடுந்தீவில் உள்ள தமது உறவினர்களின் நிலை பற்றித் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் யாழ்ப்பாண நகரத்திலும் ஏனைய வெளியிடங்களிலும் உள்ள மக்கள் நேற்றும் குறிகாட்டுவானில் இருந்துவரும் படகுகளை எதிர்பார்த்துக் காத்து நின்றனர். (அ-111)

## கொலைகள், ஆள்கடத்தல்களை தடுக்க ஜனாதிபதி தலையிடவேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கம் வற்புறுத்து

கொழும்பு,மே27

ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் மற்றும் மனிதப் படுகொலைகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்வலியுறுத்தி உள்ளது.

நேற்று இடம்பெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டத்தில் இது சம்பந்தமான பல யோசனைகள் நிறைவேற்றப்பட்டன என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஹால் ஜெயமான தெரிவித்தார்.

ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் மற்றும் மனிதப் படுகொலைகள் ஆகியவற்றைத் தடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளதாகவும் நிஹால் ஜெயமான தெரிவித்தார். (அ-12)

## சமாதானப் பேச்சுக்கள் மீளத் தொடங்க உந்துதல் அளிப்பதே எமது குழுவின் நோக்கம்

### பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் வாஸ் சொல்கிறார்



கொழும்பு,மே27

சமாதானம் உருவாகாத பட்சத்தில் மட்டுமன்றி அதற்கான நம்பிக்கை இல்லாமற்போகும் போதும், இலங்கையின் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும்.

அதனைக் கருத்திற்கொண்டே மீண்டும் சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு உந்துதல் கொடுக்க பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழு விரும்புகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ஹெய்த் வாஸ்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் கூறினார்.

அவர் தமது செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் நடைபெறும் போரின் மீது அக்கறை கொள்வோர் மீது பல குழுவினரும் ஊடகங்களும் குற்றங்களைச் சுமத்துவது அவநம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இலங்கை விடயத்தில் அனைத்துலகத்தின் ஈடுபாடுகள் அதிகம் இருக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

மோதல்களில் ஈடுபடும் தரப்புக்களை ஓர் அமைதி வழியிலான தீர்வைக் காண்பதற்கு கொண்டுவரும் முயற்சிகளுக்காகவே

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான நிதி உதவியைக் குறைக்குமாறு ஜப்பான் மீது அழுத்தம்

### ஆனால் அதற்கு அந்நாட்டு அரசு மறுப்பு

டோக்கியோ,மே27

இலங்கைக்கு மிகக் கூடுதலான நிதி உதவி வழங்கும் ஜப்பானை, அதனைக் குறைக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான 'ஹியுமன் றைட்ஸ் வார்ச்' பெரும் அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கையில் நாளாந்தம் அதிகரித்து வரும் மனித [illegible] வதற்கு, வழிக்குக் கொண்டுவரும் விதத்தில், நிதி உதவியை வெட்டவேண்டும் என்று மேற்படி மனித உரிமை அமைப்பு ஜப்பானிடம் கேட்டுள்ளது.

இலங்கையில் நடைறெும் மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடில் நிதி

([illegible] பக்கம் பார்க்க)

வடக்கில்
இராணுவத்தின் புதிய களமுனையும் விடுதலைப் புலிகளின் புதிய களமுனையும்
3-ஆம் பக்கத்தில் வாசியுங்கள்....

## 6 பெண் போராளிகள் சரண் அடைந்ததாக அறிவிப்பு

கொழும்பு,மே27

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் ஆறு பெண் உறுப்பினர்கள் படையினரிடம் சரண் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

14 முதல் 17 வயதுடைய அவர்கள் விடுதலைப் புலிகளால் படையில் சேர்க்கப்பட்டனர் என இராணுவம் தெரிவித்தது. தொப்பிக்கல பகுதியிலிருந்து தப்பி வந்து சித்தாண்டி முகாமில் சரண் அடைந்துள்ளதாக படையினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## SRI LANKA RED CROSS SOCIETY

The under mentioned professionals need to be recruited for project implantation

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| ASSISTANT DISTRICT MANAGERS (01position)<br><br>Jaffna (01)<br><br>Job Ref #<br>HRM 194<br><br>Duration | Bachelor degree or a Advance Diploma in the field of Development Economics<br>And<br>At least three (03) years experience in empowering communities and working with community based organization<br><br>Six Months may be extended for another six months | • Assist the District Manager to coordinate with relevant Governmental and non Governmental agencies and community organizations in the designated areas on the Project:<br>• Liaise effectively with the project staff<br>• Attend the project Steering Committee at District<br>• Assist the District Manager in adminis tration work<br>• Assist the District Manager to organize District plan for Rapid Action (CPRA) and identify settlements and Community Action Plans (CAP)<br>• Assessing the needs and analyze the status of the selected communities<br>• Supervise the compliance of the Project activities with the objectives and strategy of the project<br>• Ensure the empowerment of the poor and disadvantaged community members to identify and articulate their needs and priorities through participatory process<br>• Ensure the visibility of the project and the IFRC / SLRC contribution in the field<br>• Undertake any additional tasks assigned from time to time by the District Manager |
| COMMUNITY MOBILISERS (02 POSITION)<br><br>Jaffna<br>Job Ref. #<br><br>HRM 195<br><br>Duration | A mature personality with a diploma / degree related to Sociology or Social Science. At least 3 years experience in development/construction activities with the public sector non governmental organizations or international agencies will be requiredExperience in working with communities will be a significant qualification<br><br>Six Months may be extended for another six months | • He / She should work closely with the project team. The person will perform the role of a facilitator to catalyze selected urban communities towards self-reliance and to evolve their own processes for reconstructing their communities.<br>• He/She will assist communities in social organization: such as forming community development councils: managing such community-based organizations to initiate community action planning and to implement community contracts and housing reconstruction programmes.<br>• Should have the ability to advise communities on participatory processes: |

**Salary – Attractive for Both positions**

Other Requirements for the above positions

High Degree of Computer literacy inter personal skills effective communication and management skills, a good knowledge of English and ability to work independently is essential.

The community mobilisers should have an excellent command of Sinhala or Tamil, with a good knowledge of English

Age below 45 years for all positions

Red Cross is an equal opportunity employer.
Only the short listed candidates will be contacted for the interviews
Applications should be submitted no later than 15th June 2007 to:

**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society, 73, Kandy Road Jaffna**
**Please quote the job reference # and the post you are applying for on top left-hand corner of the envelope.** (C/52491)

## பத்தாம் ஆண்டு நினைவு நாள்

அமரர்
**செல்லத்துரை மனோரஞ்சன்**



தோற்றம்
22-11-1954

மறைவு
18-05-1997

வானிருந்து எம்மை வாழ்விக்கும் தெய்வமே!
வணங்குகின்றோம், உன் நினைவென்றும் மறவோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(60974)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு



அமரர்
**சாமுவேல் பெனடிக்ற்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

மண்ணில்
05.12.1930

விண்ணில்
27.05.2006

'ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர் செய்த நன்மைகளே அவர்களைப்
பின் தொடர்ந்து கூட வரும்' தி.வெ.14:13

சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்
இறைவனில் இளைப்பாற என்றும் வேண்டுவோம்.

சென்.அன்ரனீஸ் லேன்,
பண்டத்தரிப்பு.

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மகன்.**

(60888)

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

வையத்துள்
22 - 05 - 1935



தெய்வத்துள்
25 - 04 - 2007

**கந்தையா சண்முகம்**


கடந்த 25.04.2007 அன்று லண்டனின் அமரத்துவம் அடைந்த எமது அண்ணன் கந்தையா சண்முகம் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் இடம்பெறும். அன்னாரின் நினைவாக அன்னதான பூஜை நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கண்ணன் மெய்யடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (60958)

க.தேவராசா(சகோதரர்)
ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.

## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
18 - 08 - 1946



மறைவு
27 - 04 - 2007

அமரர்
**செல்லப்பா சக்திவேல்**

கடந்த 27-04-2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் செ.சக்திவேல் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (27.05.07) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

30/2, சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி. (60908)

குடும்பத்தினர்.

### விற்பனைக்கு

P4 கணனி
விற்பனைக்குண்டு
தொடர்பு:
கு.சிறீதரன்,
10, நாவலடிலேன்,
திருநெல்வேலி.
0776309947
(60943)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் கோழி(ICE) வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர்
பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
(60943) நல்லூர்.


## மூர்த்தி

MOORTHY

ஸ்ருடியோ & லேசர் டிகிற்றல் கலர் லாப்

யாழ் மண்ணில் முதல் முறையாக
அறிமுகப்படுத்துகின்றோம்

DIGITAL PLASTIC IDENTITY CARD PRINTING
Job Identity card, School Identity card

அழகான, பழுதடையாத,
நீண்ட காலம் பாவிக்கக்கூடிய
அடையாள அட்டைகளை வழங்குகின்றோம்



63/17, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் புதிய களமுனை: வவுனியா – மன்னார் எல்லையில்

# புலிகளின் புதிய களமுனை: குடாநாட்டின் தென்மேற்கு வாசலில்

ஸ்ரீலங்காவில் நடைபெற்றுவரும் போரில் தற்போது ரடார்களின் சொற்பிரயோகங்களும் அதன் பாவனையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதற்கான காரணியாக அமைந்தவர்கள் வான்புலிகளே.

அதாவது, விடுதலைப் புலிகளின் வான், கடல் நடமாட்டங்களை அதிக செயல்திறனுடன் அவதானிப்பதற்காக ஸ்ரீலங்கா படையினர் தமது ரடார்களின் வலிமையை அதிகரிக்கும் அதே சமயம் அவற்றை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் நிறுவிவருகின்றனர்.

இந்த அவதானிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் நெடுந்தீவும் ஒன்று. இது வடபகுதியில் யாழ்.குடா நாட்டிற்கு தென்மேற்காக அமைந்துள்ள 7 தீவுகளில் உள்ள பெரிய தீவாகும். நெடுந்தீவு யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக தொலைவில் அமைந்துள்ளதுடன் 70 சதுர கிலோமீற்றர் பரப்பளவும் உடையது. இந்தத் தீவு யாழ்பாணத்தில் இருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளபோதும் இந்தியாவின் தமிழ்நாட்டின் தெற்கு கரையான இராமேஸ்வரத்தில் இருந்து 38 கி.மீ தூரத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தரைத் தொடர்புகள் அற்ற நெடுந்தீவை புங்குடுதீவில் உள்ள குறிகாட்டுவான் படகுத்துறையில் இருந்து படகுகள் மூலமே அடைய முடியும். எனினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பூநகரி மன்னார் பகுதிகளுக்கு அண்மையாக இருப்பதனாலும். இந்தியாவின் தமிழ் நாட்டின் தெற்குக் கரைக்கு அண்மையில் இருப்பதனாலும், (அதாவது இராமேஸ்வரத்திற்கும் மன்னாருக்கும் இடையில் உள்ளதனால்) பூகோள ரீதியாக இது படைத்துறை முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது கண்காணிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஸ்ரீலங்காவின் பெருமளவான படைபலம் குவிந்துள்ள யாழ்.குடா நாட்டுக்கான மேற்குப்புற நுழைவாயிலின் எல்லையில் இது அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு வியூகங்களுக்காக தீவகப்பகுதிகள் பலப்படுத்தப்பட்டபோது நெடுந்தீவும் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் வடமுனையில் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. எனினும், உக்கிரமடைந்த மோதல்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கான விநியோகங்களைத் தடுக்கவும், போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மன்னார் ஊடாக இந்தியா செல்வதைத் தடுக்கும் நோக்குடனும் இந்த தீவின் தென்முனையில் கடற்படைத் தளமும் கண்காணிப்பு நிலையும் கடந்த வருடம் அமைக்கப்பட்டன.

### பூநகரி தொடக்கம் விடத்தல் தீவுவரை கண்காணிக்க வசதி செய்யப்பட்டிருந்தது

இந்தத் தளத்தில் யாழ். குடாநாட்டில் படையினர் வசம் உள்ள ரடார்களில் மிக நவீனமான ரடார்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதில் உள்ள அதிக தூரவீச்சுக் கொண்ட ரடார்களின் (**Long-range Battlefield Surveillance Radars**) உதவியுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான பூநகரி தொடக்கம் விடத்தல்தீவு வரையான பகுதிகளும் மன்னாரின் மேற்குப்புற கடற்பகுதிகளும் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டுவந்தன.

விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்கள் ஆரம்பமாகிய பின்னர் இந்த ரடார் நிலையத்தின் தேவை மேலும் அதிகரித்திருந்ததுடன், இலகுவாக நகர்த்தப்படும் வான்பாதுகாப்பு ரடார்களும் (**Mobile Air-Defence Radars**) அங்கு நிறுவப்பட்டன. மன்னார் வான்பரப்பில் பறக்கும் விடுதலைப் புலிகளின் விமானங்களை அவதானிப்பதுடன், விடுதலைப் புலிகளின் விமானங்கள் மேற்கு வாசலின் ஊடாக குடா நாட்டுக்குள் ஊடுருவுவதைக் கண்காணிக்கும் பணியையும் அது மேற்கொண்டு வந்தது.

ஆனால் இந்த முக்கியத்துவம் வாய்ந்த கடற்படை கண்காணிப்பு நிலையம் விடுதலைப்புலிகளின் ஈரூடகப் படையணியினரின் (**Marines**) தாக்குதலுக்கு உள்ளாகியதுடன், கண்காணிப்பு ரடார் நிலையமும் கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்புலிகளின் பரிணாம வளர்ச்சியின் ஓரங்கமாக நாலாவது ஈழப்போரில் உருவாகிய ஈரூடகப் படை யணி ஒரு மைல்கல் ஆகும். ஏனெனில் அதிகளவு கடற்பரப்பை கொண்ட ஸ்ரீலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கு போர் முனைகளுக்கு இந்த படையணியின் தேவை அவசியமானது.

உலகின் வல்லமை மிக்க நாடான அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட எல்லாச் சமர்களிலும் அதன் ஈரூடகப்படையினரின் பங்களிப்புக்கள் முக்கியமானவை. உலகிலேயே அதிகளவான ஈரூடகப் படையினரை கொண்ட நாடாக விளங்குவதும் அமெரிக்கா தான். ஏறத்தாள 175,000 செயற்திறன் மிக்க ஈரூடக படையினருடன், 40,000 பின்னிருக்கை படையினரையும் அது கொண்டுள்ளது.

### மண்டைதீவு, அல்லைப்பிட்டித் தாக்குதல்களே ஈரூடகப் படையணியின் முதலாவது தாக்குதல்

இந்தப் படையணியில் புலனாய்வுப் பிரிவு, ஆழ ஊடுருவும் பிரிவு, இலக்கைத் தேடிக் கண்டறியும் பிரிவு, தேடி அழிக்கும் பிரிவு, வான் எதிர்ப்பு துப்பாக்கி பிரிவு, நீரடிநீச்சல் பிரிவு என்பன உண்டு. நீரிலும் நிலத்திலும் சமர் புரியும் ஈரூடக படையணியானது கடற்படை மற்றும் தரைப்படையின் நகர்வுகள், நகர்வுகளுக்கான தடை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை 1995 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மண்டைதீவு முகாம் தகர்ப்பு, 1993 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பூநகரி தவளை நடவடிக்கை, 2000ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடாரப்பு தரையிறக்கம் போன்றவற்றில் கடல் மற்றும் தரை சார் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்திருந்த போதும் அவை ஈருடகப்படையணியின் நடவடிக்கையாகக் கொள்ளப்படவில்லை.

எனினும், கடந்த ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் நாள் அதிகாலை மண்டைதீவு, அல்லைப்பிட்டி படைத்தளங்களையும், ஆட்டிலறிதளத்தையும் அழித்த நடவடிக்கையே ஈரூடகப் படையணி என்னும் சிறப்பு பயிற்சி பெற்ற படையணியின் முதலாவது நடவடிக்கையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. விரிவடையும் களங்களுக்கு ஏற்ப புதிதாக உருவாக்கம் பெற்றுள்ள இந்தப் படையணி குடாநாட்டின் சமர்களங்களுக்கு மிகவும் அவசியமானது. ஏனெனில் பூகோள ரீதியாக யாழ். குடாவானது அதிக கரையோரங்கள், தீவுகள், களப்புக்கள், குடாக்கள் கொண்ட பகுதி என்பதுடன் படையினரின் பெருமளவான படை நிலைகள் கரையோரங்களை அண்டியே அமைந்துள்ளன.

### கடற்படையினரின் கண்காணிப்பிலிருந்து சாதுரியமாக நகர்ந்து நெடுந்தீவில் அதிரடித் தாக்குதல்

கடந்த வியாழக்கிழமை (24.05.2007) நடைபெற்ற தாக்குதலின் போது மன்னாரின் வடமுனையான விடத்தல் தீவு மற்றும் பூநகரி பகுதிகளில் உள்ள விடுதலைப்புலிகளின் தளங்களில் இருந்து கடற்புலிகளின் துணையுடன் புறப்பட்ட ஈரூடகப்படையணியினர் கடற்படையினரின் தலைமன்னார் நெடுந்தீவு கண்காணிப்பு நிலைகளின் பார்வையில் இருந்து சாதுரியமாக நகர்ந்து அதிகாலை 12.45 மணியளவில் நெடுந்தீவின் தென்முனையில் தரையிறங்கியதுடன் 20 நிமிட அதிரடித் தாக்குதலில் தளத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர்.

இந்த மோதல்களின் போது காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்து உதவிக்கு விரைந்து சென்ற டோரா பீரங்கிப்படகுகளும், தலைமன்னார் கடற்படைத்தளத்தில் இருந்து சென்ற நீரூந்து விசைப்படகுகளும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இதில் ஒரு டோரா செயலிழந்ததுடன், மேலும் இரு படகுகள் சேதமடைந்துள்ளதாகவும், 35 படையினர் வரையில் பலியானதாகவும் விடுதலைப் புலிகளின் தரப்பு தெரிவித்துள்ளது. எனினும் அரசு தமது தரப்பில் 04 பேர் கொல்லப்பட்டதாகவும் 04 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

### ரடார் நிலையத்தைக் கைப்பற்றுவதே புலிகளின் பிரதான நோக்காக இருந்தது

ஏறத்தாழ மூன்று மணிநேரம் முகாமை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலிகளின் ஈரூடகப் படையினர் படையினரின் நவீன ரடார் சாதனங்களையும், 0.50 கலிபர் கனரக துப்பாக்கிகள் 03 உட்பட பெருமளவான ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டு தளம் திரும்பிவிட்டனர். இத்த நடவடிக்கையில் ரடார் நிலையத்தை கைப்பற்றுவதே விடுதலைப்புலிகளின் பிரதான தாக்குதல் இலக்காக இருந்துள்ளது.

இங்கு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் நீண்ட தூர கனரக துப்பாக்கிகள் கணிசமானவை. அதாவது ரடாரின் பாதுகாப்புக்கும், வான் எதிர்ப்புத் தாக்குதலுக்கும் என்றே அவை அங்கு குவிக்கப்பட்டிருந்தன. இந்த தளத்தின் நோக்கமும் அதுவே மேலும் ரடார் நிலையத்தின் பாதுகாப்பே அங்கு முதன்மைப்படுத்தப்பட்டும் இருந்தது. இந்த ரடார் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பும் படையினரிடம் மேலோங்கி இருந்தது.

விடுதலைப் புலிகளின் இந்த தாக்குதலைத் தொடர்ந்து வடபோர்முனையின் தென்மராட்சிப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரில் ஏறத்தாழ 300, 400 வீரர்கள் தீவுப் பகுதியை நோக்கி அவசரமாக நகர்த்தப்பட்டுள்ளதுடன் படையினரின் கவனமும் தீவுப் பகுதிகளை நோக்கிப் பரவலடைந்துள்ளது.

### பாதுகாப்பு ஒருங்கமைப்பில் பல சிக்கல்களைத் தோற்றிவித்துள்ளது

பல மைல் தூரம் கடலைக் கடந்து சென்று கடற்படைத் தளத்தை தாக்கிவிட்டு ஆயுதங்களையும் கைப்பற்றிக் கொண்டு விடுதலைப்புலிகள் பாதுகாப்பாக தளம் திரும்பியுள்ளனர். விடுதலைப்புலிகளின் ஈரூடகப்படையினரின் தீவுப் பகுதி மீதான இந்த இரண்டாவது நடவடிக்கை படையினரின் பாதுகாப்பு ஒழுங்கமைப்பில் பெரும் சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

அதாவது எதிர்காலத்தில் தீவகத்தில் உள்ள படையினரின் தளங்கள் மற்றும் அந்தத் தளங்களை பாதுகாக்கும் பாதுகாப்பு நிலைகள் போன்றவற்றிற்கு தேவைப்படும் படையினரின் எண்ணிக்கை மிக அதிகமாகப் போகின்றது. தீவகத்தில் ஏற்படும் பாதுகாப்பு அச்சறுத்தல் மன்னார் மற்றும் காரைநகர் தளங்களுக்கான நேரடியான அச்சுறுத்தல் என்பதுடன், அவற்றிற்கு இடையிலான தொடர்புகளும் துண்டிக்கப்படலாம்.

### வடக்கிற்கான இராணுவ விநியோகத்தில் பின்னடைவை ஏற்படுத்தும்

இது வடக்கிற்கான விநியோகத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தக் கூடியது. நெடுந்தீவு தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்த முன்னாள் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியும், இராணுவப் பேச்சாளருமாகிய மேஜர் ஜெனரல் சரத் முனசிங்கா கூறியதாவது.

'நெடுந்தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யாழ்.குடாநாட்டை கைப்பற்றுவதற்கான அவர்களின் திட்டதிற்கான ஒரு படிக்கல். விடுதலைப் புலிகள் நெடுந்தீவை தக்கவைத்திருந்தால் அது குடாநாட்டின் வடபகுதிக்கான விநியோகங்களை பெருமளவில் பாதிக்கும்'- எனத் தெரிவித்திருந்தார்.

கிளாலி, முகமாலை, நாகர்கோவில் என யாழ்.குடாநாட்டின் தென்கிழக்கில் இறுகிப்போயுள்ள களமுனைகளில் படையினரின் கவனம் செறிவாகியபோது, புதிதாக தென்மேற்கு திசையில் ஒரு களமுனை திறக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு களமுனை நாளை பல களமுனைகள் ஆகலாம். ஆனால் அவற்றை பாதுகாக்கும் படைபலமும் விநியோக மார்க்கங்களும் படையினருக்கு உண்டா என்பதுதான் இன்று எழுந்துள்ள முக்கிய கேள்வி.

**வேல்ஸில் இருந்து அருஷ்**

அதாவது, கிளாலி, முகமாலை, நாகர்கோவில் அவற்றுக்கு இணையாக இந்த முனைகளை பலப்படுத்த வேண்டிய தேவை படையினருக்கு ஏற்பட்டால் அது படையினருக்கு மிகுந்த நெருக்கடிகளை கொடுப்பதுடன் படையினரின் எல்லா முனைகளையும் பலவீனப்படுத்திவிடும்.

விடுதலைப் புலிகளின் படைபலத்தின் கவனத்தை திரும்பும் நோக்குடன் படையினர் புதிதாக அமைக்கப்பட்ட தமது 57 ஆவது வலிந்த தாக்குதல் படையணியினரை கொண்டு வவுனியா மன்னார் எல்லையில் புதிக களமுனை ஒன்றைத் திறக்க முயற்சித்துவரும் வேளையில், விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டின் தென்மேற்குப் புற வாசலில் புதிய களமுனை ஒன்றைத் திறந்துள்ளனர். இந்த களமுனை குடாநாட்டின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தல் என்று தாக்குதல் நடைபெற்ற சில மணிநேரங்களில் மூத்த படையதிகாரி கூறியது அதன் முக்கியத்துவத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. *

# செவ்வாயில் அதிகளவு தண்ணீர்: நாசாவின் புதிய தகவல்

வாஷிங்ரன், மே27

சிவப்புக் கிரகம் என அழைக்கப்படும் செவ்வாய்க்கிரகத்தில் அதிக அளவில் தண்ணீர் இருப்பதாக அமெரிக்காவின் நாசா நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

தமது நிறுவனத்தின் ஸ்பிரிட் ஆராய்ச்சி விண்கலம் இதற்கென மேலும் பல ஆதாரங்களை அனுப்பிவைத்துள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சூரியனில் இருந்து 22.56 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ள செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக ஏற்கனவே சில ஆதாரங்களை நாசா வெளியிட்டிருந்தது.

தற்போது செவ்வாயில் முன்பு கூறப்பட்ட அளவைவிட அதிகமான தண்ணீர் இருப்பதாக நாசா அனுப்பியுள்ள ஸ்பிரிட் விண்கலம் தகவல் அனுப்பியுள்ளது.

குசேவ் பள்ளம் என்று அழைக்கப்படும் பகுதியில் அதிகளவு சிலிக்கா படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தண்ணீர் அதிகளவில் இருப்பதை உறுதிப்படுத்துவதாக நாசா தகவல் வெளியிட்டுள்ளது.

கந்தகம், தாதுக்கள், எரிமலைகள் என்பவையும் செவ்வாயில் இருப்பதற்கான ஆதாரங்ளையும் ஸ்பிரிட் விண்கலம் அனுப்பி வைத்துள்ளது.

# நிகழ்வுகள்

கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் 'பல்லவி அமுதம்' என்னும் நூல், இறுவட்டு ஆகியவற்றின் வெளியீடு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இணுவில் இளந் தொண்டர் சபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வட இலங்கை சங்கீதசபையைச் சேர்ந்த சு.கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். இதில் நூல் மதிப்பீட்டுரையை சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து 'பல்லவி அமுதத்துளி' இசை அரங்கும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பாடசாலை மட்டத்திலான உயர்கல்விச் செயற்பாடுகள் திட்டத்தின்கீழ் ஆரம்பக் கல்வி மாணவர்கள், பெற்றோருக்கான ஆரம்ப கணித பாடப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டு வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை கச்சாய் அ.த.க. பாடசாலையில் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (207)

* * *

யாழ். மாவட்டத்தில் புற்றுநோய்க்கான கதிர்வீச்சுச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர் வரும் 4ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதி வரை ஐந்து பாடசாலைகளில் கண்காட்சியும் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்படவுள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு மற்றும் யாழ். மருத்துவபீடம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இது நடத்தப்படவுள்ளது.

4ஆம் திகதி இந்து மகளிர் கல்லூரியிலும், 5ஆம் திகதி வட்டு.இந்துக் கல்லூரியிலும், 6ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், 7ஆம் திகதி அச்சுவேலி மத்திய கல்லூரியிலும், 8ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் இந்நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

தினமும் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

# பிள்ளையார் ரத வெள்ளோட்டம்

நிகழும் சர்வசித்து வருஷம்
வைகாசி மாதம் 13ஆம் நாள் இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியில் வரும்
சுபமுகூர்த்த வேளையில் அம்பாளின் அருளால்
சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
பிள்ளையார் ரத வெள்ளோட்டம்

*விசேட மங்கள இசை:*


**நாதஸ்வரம்**

நல்லூர்
நாதஸ்வர இளம் சக்கரவர்த்தி
**பாலமுருகன்** குழுவினர்

நாச்சிமார் கோயிலடி
**சுரானஜோதி சிவதாஸ்** குழுவினர்

சுதுமலை
**வினோதன்** குழுவினர்

*சிற்பமாமணி,*
*சிற்பகலாரத்னா,*
*சிற்பகலாஜோதி,*
*சிற்பாசாரியார்*
**நடராசா சிவபாலன்**
**கோணேஸ்வரன் கலைஞர்கள்**
**பொன்னம்பலம் வீதி,**
**ஆலடி, காரைநகர்.**



**அம்பாளின் அடியார்கள் அனைவரும் வருக! அருளைப் பெறுக!!**

## ரத திருப்பணிகள்:

மகாதேவன் இராஜசௌந்தரி குடும்பம், மணிவாசகசிவம் சுந்தரேஸ்வரி குடும்பம், இராஜதேவன்
பத்மினி குடும்பம், டாக்டர் மகேந்திரன் அம்பிகாதேவி குடும்பம்,
ஆனந்தசிவதாஸ் இந்திராதேவி குடும்பம்,சகாதேவன் கலாவதி குடும்பம்,
ஜெகதீஸ்வரன் சிவகௌரிதேவி குடும்பம், ஜெயபாலதேவன் யசோதரா குடும்பம்,
சத்தியசீலன் ஜெயதேவி குடும்பம்,
**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.**

(60720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியாவில் மீண்டும் தலைகாட்டும் சிக்குன்குனியா; இங்கு நோய்த்தடுப்பு பிரிவு உச்சநிலை விழிப்படைய வேண்டும்

மிகச்சிறிய இடைவெளியின் பின் 'உதயன்' முற்பக்கத்திலே அதிர்ச்சி தரும் செய்தி. கேரளத்தில் சிக்கின்குனியா மூவர் பலி, தமிழகத்தில் தற்காப்பு நடவடிக்கை. அன்றுதான் சிக்குன்குனியா வகைக் காய்ச்சல் பற்றிய எமது ஆய்வுரை யாழ். பல்கலைக்கழகத்திலே நிகழ்ந்தது. அதன் சுருக்கத்தினை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

இந்த ஆரம்ப கட்ட ஆய்வானது யாழ்ப் பாணத்திலே சிக்குன்குனியா வகைக் காய்ச்சல் முதலிற் பரவத் தொடங்கிய இணுவிலிலே, இணுவில் மேற்கிலே (முழுக்கிராமமும் உள்ளடக்கப்பட்டது) மேற்கொள்ளப்பட்டது. முழுக்கிராம முமே இக்காய்ச்சலால் ஆட்கொள்ளப்பட் டுப் பெரும்பாலும் அனைத்து வீடுகளிலு முள்ள யாவரும் காய்ச்சல் (3-5 நாள்கள்), மூட்டு வலிகளோடு, தலையிடி, நாரிநோ, ஓங்காளம், வாந்தி, உடற்சொறி போன்ற வற்றில் ஒன்றையோ, சிலவற்றையோ, பல வற்றையோ கொண்டிருந்ததோடு,

பெரும்பாலானோர் இரண்டு மாதத் திற்கு மேலாகவும் மூட்டு வலியைக் கொண்டிருந்தனர். அநேகமானோர் தனி யார் மருத்துவமனைகளிலேயே சிகிச்சை பெற்றுள்ளனர். அனைவரும் ஆரம்பக் கல்விக்கு மேற்பட்டுக் கற்றிருப்பதோடு, ஓரளவு போதுமான வருமானமுங் கொண்டி ருந்தனர். இந்நோய் வயது, பால் வேறு பாடின்றித் தாக்கியுள்ளது. பெரும்பாலும் மலேரியாவையே நுளம்புகளால் பரவும் நோயென அறிந்திருந்ததோடு, "அனோ பிலிஸ்" வகை நுளம்புகளைக் கட்டுப் படுத்தும் முறைகளையே அறிந்துள்ளனர்.


### சிக்குன்குனியாவுக்கு காரணம் வைரசே

வைரசே சிக்குன்குனியா காய்ச்சலினது காரணியெனப் பெரும்பாலானோர் அறிந் திருக்கவில்லை. ஒருசிலர் சம்பா அரிசியே இதற்குக் காரணமென்றனர். நுளம்புத் தொல்லை மாலைவேளைகளில் இருப்ப தாகவும் பருவகாலங்களில் மாத்திரம் ஏதாவதொரு தனிநபர் பாதுகாப்பு முறையை (நுளம்பு வலை, நுளம்புத்திரி, புகை, மின்விசிறி போன்றன) உபயோகிப் பதாகவும் கூறியுள்ளனர். பத்திரிகை வாயி லாகவே இந்நோய் பற்றிக் கேள்விப்பட் டதாகவும் பிரதான வீதிகளில் மட்டுமே நுளம்பிற்குப் புகையடித்துச் சென்றதாக வும் கூறினர். வீட்டுச் சுற்றாடலை அவ தானித்ததிலிருந்து "ஈடிஸ்" வகை நுளம் புக் குடம்பிகள் காணப்பட்டன.

மேற்படி ஆய்விலிருந்து பின்வரும் முடிவுகளிற்கு வரக்கூடியதாயுள்ளது.

### முதல் முறை என்பதால் தாக்கம் கடினம்

★ இதுவே முதற்தடவை என்பதால் நீர்ப்பீடனம் இருந்திருக்கவில்லை. ஆகவே தாக்கம் சற்றுக் கடுமையானதே.



★ சிக்குன்குனியா 1965இல் கொழும் பையும் மேற்கு இலங்கையையும் தாக்கிய போதும் 1973 இல் தமிழ் நாட்டைத் தாக்கிய போதும் யாழ். மண்ணிற்கு ஏற்டாத பாதிப்பு இப்போது ஏற்பட்டதானது, A-9 பாதை மூடியதன் பின்னான உளநெருக் கீடு, போசணைக் குறைபாடு போன்ற பல் வேறு காரணிகளாக இருக்கலாம். ஆனால், ஆய்வுகள் மூலமே இவை நிரூபிக்கப்பட வேண்டும்.

★ காவிகளான நுளம்பைக் கட்டுப் படுத்துவதில் பொதுமக்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது. வேறு யாராவது வந்து இதனை மேற் கொள்ளவேண்டும் என்ற மனப்பாங்கே மிகுதியாயுள்ளது.

★ நோயை அனுபவித்த பின்னரும் வீடுகளிலே நுளம்புக்குடம்பிகள் காணப் பட்டமை மீண்டுமொருமுறை இதேவகை நுளம்புகளாற் பரவும் "டெங்கு" போன்ற நோய்கள் பரவலாமென்பதை மறுக்க முடியாது.

மேற்படி முடிவுகளுக்கு பின்வரும் ஆலோசனைகள் வழங்கலாம்.

★ தலைமன்னார், நெடுந்தீவினூடாகத் தமிழகத் தொடர்புகள் இருப்பதால் தமிழ் நாட்டில் ஏதாவது நோய் பரவத் தொடங் கும்போதே எமது நோய் தடுப்புப் பிரிவு உச்சநிலை விழிப்படைதல்வேண்டும்

### ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்

★ இப்பிரிவு பல்வேறுபட்ட தொடர்பு களை ஒருங்கிணைத்துச் செயற்படவேண்டும்.

• ஆய்வாளர்கள், அரச சார்பற்ற நிறு வனத்தினர், முக்கியமாக மக்கள் (மாண வர்கள், சனசமூக நிலையத்தினர், சமூக சேவகர்கள்), ஊடகங்கள்.

★ மக்களிற்கான சுகாதார விழிப்பூட்ட லும் அவர்களைப் பங்கு கொள்ளச் செய்த லும் மிகவும் அவசியம்.

★ பின்னூட்டல்களைப் பெறுவதோடு தொடர்ச்சியான காவிகள் பற்றிய ஆய்வு கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ போதனா வைத்தியசாலையிலோ, பல்கலைக்கழகத்திலோ பிராந்திய தொற்று நோய் ஆராய்ச்சி நிலையம் தோற்றுவிக் கப்படவேண்டும்.

### உயிர்கொல்லி நோய் பரவத்தொடங்கினால் எதிர்கொள்ள நாம் தயாரா?

இந்த அளவிற்கு மிகவும் மோசமாகப் பரவி மக்களை நீண்ட நாள்களிற்கு இய லாமல் வைத்திருந்த சிக்குன்குனியா ஒரு நேரடியான உயிர்கொல்லி நோயல்ல என் பது ஓர் ஆறுதல் தரும் விடயமே. ஆனா லும் இவ்வகையில் ஓர் உயிர்கொல்லி நோய் பரவ முனைகையில் அதனைத் தடுக்க நாம் தயாரா?

(மேற்படி ஆய்வில் பங்குபற்றியோர்- செ.கண்ணதாசன், ஆ.கஜதீபன், பு.ஜ.யூட், சி.நோ.சுரேந்திரன்).

டாக்டர். செ.கண்ணதாசன்,
விரிவுரையாளர், மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு தனியாக மின்சாரம் வழங்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.போதனா வைத்தியசாலையின் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் மின்விநியோகத்தைச் சீராக வழங்குவதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இத்தகவலை மின்சார சபையின் பொது முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்:

குடாநாட்டிற்கு போதியளவு மின்விநி யோகத்தைத் தற்போது மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் சுழற்சி முறையில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த மின்வெட்டினால் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான யாழ். போதனா வைத்தியசாலையின் சேவைகள் பாதிப் புறாத வகையில் தனியான விநியோகத்தை வைத்தியசாலைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பழைய கட்டடத்தில் மின்பிறப்பாக்கி ஒன்றை வைத்து அதிலிருந்து வைத்தியசாலைக்குத் தேவையான மின் வழங்குவதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மின்விநியோகம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இந்த விசேட மின் விநியோகம் மேற்கொள் ளப்படும் - என்றார். (202-68)

**விழா நாள் சேவைகள்**



★ மணப்பெண் அலங்கரிப்பு (Brid'al make - up)
★ பேஷியல் ★ Eye brow Shapping
★ திருமண, பிறந்தநாள் கேக் ஐசிங் அலங்கரிப்புகள்
★ சுவரலங்கார ரெஜி:.போம் வேலைகள்
இன்னும் பல விழா நாள் சேவைகள்....
தூரிகை ம.ம.வி. வீதி, நெல்லியடி.
மனையியலுக்கான பிரிவு II பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. (60961)

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

கனடாவில் வசிக்கும்
றமேஸ் - சுகிதா தம்பதியரின்
செல்வப் புதல்வன் விகேஸ்
தனது முதலாவது பிறந்த தினத்தை
இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை வாழ்த்துபவர்கள்:
அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், சித்தி, மாமா, அத்தைமார், மச்சாள், மச்சான், தங்கை மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பத்திரகாளி அம்பாள் துணையுடன் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (60959)
ஆ.சுந்தசாமி [அப்பப்பா].




**இலக்கியா**
**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**




பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த
மதிரூபன் - றஜனி (கிருபா) தம்பதிகளின்
செல்வப்புதல்வி இலக்கியா
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை 85, சம்பியன் லேன், கொக்குவில் இல்லத்தில் கொண்டாடுகின்றார். இலக்கியாவை அன்பு அம்மா, அப்பா, அன்பு அம்மம்மா, தாத்தா, பாட்டி, ஆசை அத்தை;ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, சங்குவேலியில் வசிக்கும் பெரிய பூட்டம்மா, கோப்பாய் வடக்கில் வசிக்கும் கமலா அம்மம்மா, அஜந்தன் மாமா,சித்திமார், டனுசி சித்தி, பூட்டம்மா, ஜேர்மனியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மட்டக்களப்பில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா அனைவரும் கற்புலத்து மனோன்மணி அம்மன் துணையுடன் பல்கலையும் கற்று சீருஞ்சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

85, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. அம்மம்மா (S. மல்லிகாதேவி).

**50 ஆவது திருமண ஆண்டு நிறைவு**



இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை, இனிய இல்லறத்தில் இணைந்து பொன்விழாக் காணும்
சூவாம்பிள்ளை
மேரி பொன்னம்மா
தம்பதியினரை, பண்டத்தரிப்பு
அன்னை பத்திமாதாவின் அருள் பெற்று
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

எங்களுயிர் எமக்களித்து
அன்புடனே வளர்த்தெடுத்து,
அறிவூட்டிச் சிறக்க வைத்து
அவனியிலே உயரவைத்த, எம்
அன்னையவள் தந்தையோடு
இல்லறத்தில் இனிது மகிழ்ந்து,
ஈருடலும் ஒருயிராய் பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகிறோம்; வணங்குகிறோம் நும் தாள்.

பிள்ளைகள்:
மரியதாசன் - பிளஸ்டஸ் குடும்பம்(பிரான்ஸ்),
ஹென்றியோ - மனோகரன் குடும்பம்(பிரான்ஸ்),
விக்டர் - திரேசா குடும்பம்(பிரான்ஸ்),
விஜயகுமார் - புனிதம் குடும்பம்(ஜேர்மனி),
எமில் - மேரி பெர்னடேற் (செல்வம்) குடும்பம் (பண்டத்தரிப்பு)
மற்றும் உறவினர்கள்.
ராஜ் வெதுப்பகம் - பண்டத்தரிப்பு.

**திருமண வாழ்வின்**
**25ஆம் ஆண்டு நிறைவில்...**



பாஸ்கரன் - அருமைநாயகி
தம்பதியினர் இன்று தமது
25ஆவது ஆண்டு திருமண நாளை
மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர்.

இவர்கள் என்றென்றும் மகிழ்வுடனும் சௌபாக்கியத்துடனும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்று வாழ்த்துவோர்:

"பொன்னகம்",
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (60944)
பிள்ளைகள்
(சுபத்திரா, சுதர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அன்னை மடியில்**

**28**

**08**

**1932**



**ஆண்டவன் அடியில்**

**01**

**06**

**2006**





## அமரர்

# ஸ்ரீமான் இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

**(வல்வையூர் சிங்கம் அண்ணா)**

**(ஸ்தாபகர்: ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனம், R.V.G.மருந்தகம் - யாழ்ப்பாணம் - கொழும்பு)**

பாசமிகு எங்கள் தந்தையே! குடும்பத்தின் ஒளி விளக்காய் - இருந்து
எங்கள் எல்லோருக்கும் நல்வழி காட்டிய என்
அன்புத் துணைவரே! ஓர் ஆண்டு என்ன? பல்லாண்டுகள்
ஆனால் என்ன உங்கள் அன்பும் பாசமும் அறிவுரைகளும்
என்றும் எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஸ்ரீ இராகவேந்திரா நமகா...

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனம் (R.V.G.),
இல.58, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகன்கள், மகள், மருமகன், மருமகள்மார், பேரன்கள்,
பேத்தி, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள்,
சம்பந்திமார், உற்றார், உறவினர்கள்.

(60953)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கையின் காய்ச்சலுக்கு இலக்காகித் தடுமாறும் பிரிட்டன்

'தீர்ப்பு நமது பக்கத்துக்குச் சார்பாக அமைந்தால் நீதிபதி நல்லவர். ஆனால் அவரின் தீர்ப்பு எதிராளி பக்கத்துக்கு சார்பாக அமைந்தால் நீதிபதி பக்கச்சார்பானவர்.'

- சர்வதேசம் குறித்து தென்னிலங்கைச் சிங்களம் கொண்டிருக்கும் கருத்தும் நிலைப்பாடும் இதுதான் போலும்.

இலங்கை இனப்பிரச்சினை, அதனால் மோசமாக வெடித்திருக்கும் போர், அந்த யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பெரும் மனிதப் பேரவலம் போன்றவை குறித்தெல்லாம் கவனமும் அதிக சிரத்தையும் கொண்டுள்ள பிரிட்டிஷ் அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றது.

அக்கருத்துகள் தென்னிலங்கையைக் கொதித்துச் சீற வைத்திருக்கின்றன. புண்ணில் புளி வீழ்ந்தாற்போல தென்னிலங்கைச் சிங்களப் பேரினவாதிகள் துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றார்கள். கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முன்னால் அவர்கள் திரண்டு கோஷமிட்டுள்ளதுடன் தூதரக வாசலில் தங்களின் மகஜரின் பிரதி ஒன்றையும் ஒட்டியிருக்கின்றார்கள். ஒன்றுக்கு இரண்டு நாள்கள் அடுத்தடுத்து ஆர்ப்பாட்டங்கள் நடந்தேறியிருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய விடயங்களை சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து நேரடியாகவே கேட்டறிவதற்காக இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள், அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வழங்கும் நோர்வே ஆகிய தரப்புகளை நேரடியாக பிரிட்டனுக்கு அழைப்பது என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு எடுத்த முடிவே தென்னிலங்கைப் பேரினவாதிகளை மூர்க்கம் கொள்ளச்செய்திருக்கின்றது.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து அதனைத் தடைசெய்வதற்குப் பிரிட்டன் நடவடிக்கை எடுத்தவேளையில் மட்டும், பிரிட்டன் நல்ல நாடு. இலங்கைப் படைகளுக்கு ஆயுத உதவியும் இராணுவப் பயிற்சியும் கொடுக்கின்றபோது சிறந்த நட்பு நாடு. புலிகளைத் தடை செய்யும் பிரேரணையை ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்ற வைப்பதற்கு பிரிட்டன் முன்னின்று உழைத்த போது நல்ல தோழமைத் தேசம்.

ஆனால், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெறுவதையும் ஆட்கடத்தல்கள், படுகொலைகள் கட்டுமட்டில்லாமல் நிகழ்வதையும் சகித்துக் கொள்ள முடியாமல் அதைச் சுட்டிக்காட்டி, மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பான பதிவுகள் சீரடையும் வரை சில உதவித் திட்டங்களை இடைநிறுத்துவது என்று அறிவித்ததும், அது எதிரி தேசமாகிவிட்டது. அத்தோடு இலங்கை நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் நேரடியாகவே கேட்டறிவது என பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்ததும் பிரிட்டன் மிக மோசமான ஆக்கிரமிப்பு நாடாகி விட்டது.

- இதுதான் தென்னிலங்கையின் கணிப்பீடு.

விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் பாதகமான முடிவை பிரிட்டன் எடுக்கும்போது நல்ல நீதிபதியாக அந்நாட்டை வரவேற்ற தென்னிலங்கை, இப்போது பிரிட்டன் நியாயம் உரைக்க முயற்சிக்கையில் - அது, தென்னிலங்கைப் பக்கத்து அநீதிகளை அம்பலப்படுத்தும்போது - பிரிட்டனை கடுமையாக வைது, இலங்கை இன்னும் பிரிட்டனின் குடியேற்ற (காலனித்துவ) நாடல்ல என்பதை லண்டனுக்கு நினைவூட்ட முயல்கிறது.

தென்னிலங்கையின் இப்போக்கு, சர்வதேச அதிருப்தியைச் சம்பாதிக்கும் அதன் தொடர் நிலைப்பாட்டில் ஓர் அங்கம்தான்.

இலங்கை இனப்பிரச்சினையை அமைதிவழியில் தீர்த்து, சமாதானத் தீர்வு ஒன்றைக் கிட்டச் செய்வதற்கான முயற்சிகளைத் தூண்டிவிடும் நன்னோக்குடன் காரியமாற்ற வந்த தங்களை, தென்னிலங்கை தவறான கண்ணோட்டத்தில் அணுகி, மோசமாக விமர்சிக்கின்றமை குறித்து இலங்கை விடயத்தைக் கையாளும் மேற்படி பிரிட்டிஷ் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் கீத் வாஸ் கவலையும் விசனமும் வெளியிட்டிருக்கின்றார்.

நடுவுநிலைமை தவறாத போக்கோடு பிரிட்டனின் அனைத்துக்கட்சி எம்.பிக்கள் குழு எடுத்த எத்தனத்துக்கு இலங்கையில் சில தரப்புகள் தவறான நிறம் பூசியிருக்கின்றமை குறித்து அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், தமிழரின் பக்கத்தில் உள்ள நியாயங்களை எத்தரப்பாவது கவனத்தில் எடுத்து அதற்கும் முக்கியத்துவம் கொடுக்குமானால், அத்தரப்பை எப்போதுமே பக்கச் சார்பான தரப்பாகவே தென்னிலங்கை பார்க்கும் என்பதே உண்மை.

அதுதான் பிரிட்டன் விவகாரத்திலும் இப்போது நடக்கின்றது!

# நீரிழிவு நோயாளருக்கென தனியான சிகிச்சை நிலையம் யாழ்.ஆஸ்பத்திரியில்

## அமெரிக்க மருத்துவ சேவை நிறுவன அனுசரணையுடன்

யாழ்ப்பாணம்,மே27

* யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், நீரிழிவு நோயாளருக்குக்கென தனியான(விசேட) சிகிச்சை நிலையம் நிறுவப்படும்.

* குடாநாட்டில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், சுற்றயல்கூறு வைத்திய சாலைகள் ஆகியவற்றில் மாதாந்தம் இரண்டு தடவைகள் வைத்திய நிபுணர்களின் நடமாடும் சேவைகள் நடத்தப்படும்.

இவற்றுக்குத் தேவையான நிதி மற்றும் உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச மருத்துவ சேவை நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அமெரிக்க சர்வதேச மருத்துவ நிறுவனத்தினரின் அழைப்பின் பேரில் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அங்கு சென்று கலந்துரையாடல்களை நடத்தினார்.

அவற்றின் விளைவாக குடாநாட்டு மக்களின் மருத்துவ வசதிகளை மேம்படுத்த பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இவற்றுக்கு மேற்படி அமெரிக்க நிறுவனம் நிதி மற்றும் வேண்டிய அனுசரணைகளை வழங்கும்.

* 2007 மே முதலாம் திகதியில் இருந்து தீவகம் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர்களுக்கு பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்பு வழங்கப்படும்.

சுற்றயல்கூறு அனலைதீவு, சுற்றயல்கூறு நயினாதீவு, சுற்றயல்கூறு காரைநகர், மாவட்ட வைத்தியசாலை புங்குடுதீவு, கிராமிய வைத்தியசாலை வேலணை, மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை, கிராமிய வைத்திய சாலை மருதங்கேணி, மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு ஆகியவையே கஷ்டப்பிரதேசங்களில் இயங்கிவரும் வைத்தியசாலைகள் என்று இனங்காணப்பட்டுள்ளன.

* தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் கதிரியக்க சிகிச்சையளிப்பதற்கு புற்றுநோயாளர்களை அவர்களது வதிவிடத்திலிருந்து தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலைக்கு ஏற்றிச்செல்வதற்கு வாகன வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

* புற்றுநோய் மருந்து, உளநல மருந்து, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்த நோயாளர்களுக்கான மருந்துகளைப் பெற்று வழங்குதல்.

* யாழ். போதனா வைத்திய சாலையிலுள்ள சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவினருக்கு நீர் சுத்திரிகரிப்பு இயந்திரம் ஒன்றை வாங்கி வழங்குதல்.

(அ-51)

## மெய்வன்மைப் போட்டிகள் செவ்வாயன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)

## வர்த்தக தபால் சேவையில் சில தரப்புகளுக்குச் சலுகை

யாழ்ப்பாணம்,மே27

குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்தகத் தபால் சேவையில் சில வகைகளைச் சார்ந்த நிறுவனங்களுக்கு சலுகை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக தபால் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைகள், மத நிறுவனங்கள், இலாபம் கருதாது செயற்படும் சேவை நிறுவனங்கள், சபைகள் போன்றவற்றுக்கே இந்த விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளது.

30 கிராம் தபாலுக்கு ஏனையோரிடம் 15 ரூபாவும் சேவை நிறுவனங்களிடம் 5 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

உரியவர்கள் எழுத்து மூலம் அஞ்சல் அலுவலகத்திற்கு அறிவிப்பதன் மூலம் இந்தக் கழிவைப் பெற்றுக் கொள்ளமுடியும். (அ-203)

## சாவகச்சேரி லயன்ஸுக்கு சிறந்த சேவைக்கென 3 சிறப்பு விருதுகள்

யாழ்ப்பாணம்,மே27

லயன்ஸ் கழகங்களினால் கடந்த வருடம்மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் அடிப்படையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பிராந்திய அடிப்படையில் மூன்று சிறப்பு விருதுகளைப் பெற்றுள்ளது.

சிறந்த தலைவர், சிறந்த கழகம், சிறந்த பொருளாளர் ஆகிய சிறப்பு விருதுகளை இக்கழகம் பெற்றுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட கழகங்களின் வருடாந்த மாநாட்டில் வைத்து இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் 306 பி1 மாவட்ட நிலையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு 14 விருதுகள் கிடைத்துள்ளன.

## காணி அன்பளிப்பு

வலி.தென்மேற்கில் கலாசார மண்டம் அமைப்பதற்கென ஒன்பது பரப்புக்காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சமூக சுகாதார சுற்றாடல் விவகார சபையின் தலைவர் சட்டத்தரணி இரா. வசந்தசேனன் இந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதையடுத்து மண்டபம் அமைப்பதற்கென சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபா நிதியைப் பயன்படுத்தி கட்டடம் அமைக்கும் பணிகள் மானிப்பாய் டச்சுவீதியிலுள்ள குறிப்பிட்ட காணியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (202-95)

### பொது எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகள்

## 30ஆம் திகதியன்று நேர்முகப்பரீட்சை பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம்,மே27

அரச சேவையிலுள்ள சிற்றூழியர்களை பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் 11 'ஆ' பிரிவுக்கு நியமனம் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு -

சி.பிரசன்னா(வேலணை பிரதேச சபை), கே.கிருபானந்தன்(வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்), கிருஸ்ணகுமார்(நல்லூர் பிரதேச சபை), கே.கணநாதன்(வலிகாமம் வலயக் கல்வித் திணைக்களம்), கே. கேதீசன் (கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம்) என்.ரஞ்சித்குமார்(முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்களம்), எம்.கே.இளங்கோ(கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களம்), ஐ.அமிர்தசீலன்(கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம்), ரி.சிவலோகராஜா(யாழ்.சுகாதாரத் திணைக்களம்), கே.தயாநிதி(மன்னார்).

எம்.தயாபரன்(வலி.கிழக்கு பிரதேச சபை), வி.பஞ்சாட்சாரநாதன் (வவுனியா சுகாதாரத் திணைக்களம்), எஸ்.யூட்(மன்னார் நகரசபை), எஸ்.கனகையா(கிளிநொச்சி), எஸ்.குகதாசன் (கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களம்), ரி.தயாளினி(வலி.தென்மேற்குப் பிரதேச சபை), டி.திருச்செல்வம்(பருத்தித்துறை நகர சபை), எஸ்.சிவநாதன் (வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்), என்.மோகனரூபன்(வேலணை பிரதேச சபை), ஆர்.தயானந்தன்(நல்லூர் பிரதேச சபை), வி.விஜயகுமார் (வேலணை பிரதேச சபை), பி.மோகனராஜன்(யாழ். சுகாதாரத் திணைக்களம்), கே.ஆதித்தன்(நல்லூர் பிரதேச சபை), எம்.பிரதீபன்(யாழ்.சுகாதாரத் திணைக்களம்).

எஸ்.ஜெயபவன்(சுன்னாகம் பிரதேச சபை), கே.சிவகுமார்(வவுனியா அரச வைத்தியசாலை), ஆர்.சித்திரா (யாழ். சுகாதாரத் திணைக்களம்), எ.அன்ரன் விமல்ராஜ்(பிரதேச சபை), ஆர்.உமா(யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகம்).

எ.விக்னேஸ்வரன்(பூநகரி பிரதேச சபை), என்.மோகனகரன்(ஊர்காவற்றுறை பிரதேச சபை), கே.கிரிசாந்தினி (வவுனியா விவசாயத் திணைக்களம்) கே.ரோகினி(கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம்) எஸ்.சுதர்சினி (மானிப்பாய் பிரதேச சபை), மு.சுதர்ஷன் (வடபிராந்தியம் உள்ளூராட்சித் திணைக்களம்).

இவர்களை உரிய ஆவணங்களுடன் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகம் அளிக்குமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் 2006 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளது. (202)

**நாளை**

| | |
|---|---|
| வைகாசி - 14 | திங்கட்கிழமை 28.05.2007 |
| திதி:துவாதசி | பின்னிரவு : 2.00 |
| நட்சத்திரம்: | சித்திரை பின்னிரவு : 0.05 |
| சுபநேரம் | : 11.52 - 01.22 |
| ராகுகாலம் | : 07.22 - 08.52 |

## ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு மட்டும் மாதம் 8 லட்சத்து 20 ஆயிரம் ரூபா சம்பளம்!

கொழும்பு,மே27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களுக்கு அரசாங்கம் மாதாந்தம் எட்டு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை சம்பளமாக வழங்குகின்றது.

மேலும் அவரது ஒருங்கிணைப்பு செயலாளர்களுக்கு இரண்டு லட்சத்து 46 ஆயிரத்து 410 ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகின்றது. மேலும் தொலைபேசி மற்றும் எரிபொருள் செலவினங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

இவர்களில் வண.மாத்தனே அமரவன்ச தேரர், ஜயந்த தனபால, ஜயரத்ன பி.விஜயக்கூன், ஹரீந்திர விதானகே, வண வல்பொல பியானந்ததேரர், காமினி குணரத்ன மஞ்சு ஹொட்டுவ மற்றும் அனுரா சொலமன்ஸ் என்போர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக கௌரவ நிலையில் பணியாற்றுகிறார்கள். சஜின் வாஸ் குணவர்த்தன மாத்திரம் ஒருங்கிணைப்புச் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர் ரவி கருணநாயக்காவின் கேள்வியொன்றுக்கு நாடாளுமன்றத்தில் பதிலளிக்கும்போது ஆளும் கட்சியின் கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்த விவரங்களை நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டார்.

கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவர். அவருக்கு மாதம் 60 ஆயிரம் ரூபா சம்பளமும் 7 ஆயிரத்து 500 ரூபா தொலைபேசி அலவன்ஸும் வழங்கப்படுகிறது.

லக்ஷ்மன் ஜயக்கொடி, றொனி டி மெல், சுனிமால் பெர்னாண்டோ தம்மிக்க அமரசிங்க,றோகான் வீரசிங்க மற்றும் தயா உபாலி ஹேவா விதாரண ஆகியோர் 60 ஆயிரம் ரூபா மாதச் சம்பளத்தில் ஆலோசகர்களாகக் கடமையாற்றும் மற்றவர்களாவர்.

முன்னாள் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன மாதம் 30 ஆயிரம் ரூபா சம்பளத்தில் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆலோசகர்களுக்கு மேலதிகமாக 10 ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கு அரசு மாதம் தலா 30 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குகின்றது. அ-(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளைக் குறைக்கப்போவதாக ஜப்பான் எச்சரித்தால் அது இலங்கை அரசிடம் மாற்றத்தைக் கொண்டுவரும் - என்று ஹியுமன் றைட்ஸ் வார்ச்சின் பிரதி நிதியான சோபி றிச்சார்ட்சன் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஜப்பான் தான் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவிகளைக் குறைக்க வேண்டும் என்று ஜப்பானிய அதிகாரி களிடம் கேட்டுக்கொள்வதற்காக, ஷோபி றிச்சார்ட்சன் இங்கு ஒருவார விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானே முதலிடம் வகிக் கின்றது. அதுமட்டுமன்றி உதவி நாடு களின் இணைப் பாளராகவும் ஜப்பானே விளங்குகிறது - தான் வகிக்கும் இந்த முக்கியமான பாத்திரத்தை உரியவாறு பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தை மட்டுமன்றி ஏனைய தரப்புகளும் பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் மனித உரிமைகளைப் பேணுவதிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நிபந்தனையுடன் வலியுறுத்த வேண்டும் என்று ஜப்பானிய அரச அதி காரிகளை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். - என்று சொன்னார் றிச்சார்ட்டசன்.

இலங்கைக்கு உலக நாடுகள் வழங் கும் நிதி உதவியில் 63 சதவீதத்தை ஜப் பானே வழங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கது. எனினும்-

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதை மறுபரிசீலனை செய்யப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஜூன் மாதத் தொடக்கத்தில் ஜப்பா னின் சமாதானத் தூதுவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். அவரது விஜயம் புதிய இலக்கை கொண்டதாக அமையும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித் தார். (அ)

## சமாதானப் பேச்சுக்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனின் அனைத்துக் கட்சி நாடாளு மன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நம்மில் எவரும் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவில்லை**

மனித உரிமை மீறல்கள், பயங்கரவாத செயல்கள் போன்றவற்றில் எந்தக் கு ழு வினர் ஈடுபட்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியது. நானோ அல்லது எமது எந்த அங்கத்தவர்களோ விடுதலைப் புலி களைச் சந்தித்தது இல்லை.

அனைத்துக் கட்சிக் குழுவானது பிரித்தானியா அரசின் கருத்தை பிரதிபலிக்க வில்லை. ஆயினும் அதில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல மூத்த உறுப்பினர்களை கொண்டுள்ளது - என்றார். ஹெய்த் வாஸ் லெய்செஸ்ரர் தொகுதி யின் நாடாளு மன்றப் பிரதிநிதியாவர். இவர் முன்னர் முன்னாள் வெளிவிவகார உதவி அமைச்சருமாவார். கடந்த ஐம்பது வருட காலத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரதிநிதியாக இருக்கும் முதலாவது இந்திய வம்சாவழியினருமாவார். இலங்கையில் ஓர் அமைதியான தீர்வை எட்டுவதற்குரிய பேச்சுக்களுக்கு புலிகள்மீதானபிரித்தானியாவின்தடைகள்காரணம் எனவும் அனைத்துத் தரப்பினரும் பேச்சுக்களில் ஈடுபட்டு ஒரு தீர்வைக் காண்ப தற்கு தடை நீக்கப் படவேண்டும் எனவும் முன்னர் பிரித் தானியாவின் நாடாளுமன்றத்தில் வாஸ் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தஷாக அழைப்பு



அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் பிரதமகுருவும், தர்மகர்த்தாவும் அருளாளர், சிவப்பணிச் செல்வர் சீனியர்- சிவகுரு ஐயாவின் துணைவியார் அமரர் **சிவகுரு சோதி** அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் நிகழும் சர்வசித்து வருடம் வைகாசி மாதம் 13ஆம் நாள் (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்விலும் அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நாவலம்பதி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

**குடும்பத்தினர்.**


**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

விஜய், அசின், வடிவேல் நடித்த

**போக்கிரி**

(றீல்ஸ்)



தினசரி : 11மணி, 3மணி. இறுதி வாரம்



**SKY COMPUTERS (PVT) LTD.**

No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.

Tel: 021 - 4590325 Fax: 021 - 2229109

Affiliated with Irish International University (U.K)

**Diploma Courses**

| | |
|---|---|
| Ms Office | 2month |
| DTP | 2month |
| Computerized Accounting | 2month |
| Hardware Technology | 2month |

Internet Email 2 weeks only 1000/=

Near the Kachcheri



கற்கைநெறியைத் தெரிவு செய்யும்போதும்
கற்பிக்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்யும்போதும்
விழிப்பாயிருங்கள்!




**CB Computer Academy**

Station Road, Kondavil. ☎:-021-4590291


## திருமண வாழ்வின் வெள்ளிவிழா நாளில்



**பாஸ்கரன் - அருமைநாயகி**

இன்று திருமணவாழ்வின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாடும் தம்பதியரை மென்மேலும் சிறப்புடன் பலகாலம் நலமுடன் வாழ வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை

*தம்பி, மைத்துனி, தங்கைமார்கள்,*
*மைத்துனர்கள், மருமக்கள்.*


உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

*259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 7835*
*46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே:7310*


## இருபதாம் ஆண்டு நினைவலைகள்



**அருளம்பலம் முத்துராஜா**

(முன்னாள் உப தபாலதிபர்,
தொண்டைமானாறு)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.04.1930 | 27.05.1987 |

அன்புடன் எம்முடன் வாழ்ந்த
வாழ்வினை இருபதாண்டுகள்
ஓடினாலும் இருபது நாள்கள்
சென்றதைப் போல் தெரிகின்றதே

காளிகோயிலடி,
கெருடாவில்,
தொண்டைமானாறு.

(60993)

என்றும் உங்கள் நினைவால் ஏங்கும்-உம்

**குடும்பத்தினர்.**

## 15ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 * 12 * 1942 | 11 * 06 * 1992 |



அமரர்

**மாணிக்கம் தங்கவடிவேல்**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், PWD)

திதி: 27.05.2007 ஏகாதசி

அன்புமொழி பேசியெம்மை அரவணைத்த தெய்வமே!
அவனியிலே நின்பிரிவால் ஆறுதலை யாமிழந்தோம்!
நல்வழியில் யாம்வாழ வேண்டுமென்ற அப்பாவே!
நானிலத்தை உங்களையாம் என்றென்றும் மறவோமே!

"தங்கத்தாமரை"
அல்வாய்.

(சி/52494)

*பிரிவால் துயருறும்,*
**குடும்பத்தினர்.**


**விற்பனைக்கு**

P4 Computer (2.4 GHz, 256 Ram, 40GB HDD), Sony Ericson P900 (touch Screen) Phone, Criative 5.1 Boofer என்பன விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
**077 7240434**
**077 6544709**


## நெஞ்சகலாத நினைவஞ்சலி

| 20ஆம் ஆண்டு நினைவு | | 16ஆம் ஆண்டு நினைவு | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 22 ★ 04 ★ 1901 | 08 ★ 06 ★ 1987 | 07 ★ 07 ★ 1934 | 25 ★ 05 ★ 1991 |





**தியாகராஜா இராஜசிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

**இராஜசிங்கம் இராஜமனோகரன்**
(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

"இராஜகிரி" காசிப்பிள்ளையார் கோயிலடி, தெல்லிப்பழை.

(60...) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு பாக்கியம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாக்கியம் 25.05.2007வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர்-செல்லிதம்பதியரின் மகளும் மார்க்கண்டின் மனைவியும் காலஞ்சென்ற நித்தியானந்தராஜாவின் தாயும் லச்சுமி,பறுபதம் ஆகியோரின் சகோதரியும் புஸ்பலதாவின் மாமியும் கல்பனா,கரிகாலன் ஆகியோரின் பேர்த்தியும் சதீஸ்வரனின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன்வீதி,
திருநெல்வேலி.

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

### நடனசிகாமணி பார்வதிப்பிள்ளை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நடனசிகாமணி பார்வதிப்பிள்ளை நேற்று (26.05.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்வை நகரசபைத் தலைவர் நடனசிகாமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மேல் நீதிமன்ற நீதிபதி யோகசிகாமணி மற்றும் சிவகாமசுந்தரி, சண்முகசிகாமணி (லண்டன்), நகுலசிகாமணி (கனடா), வனிதாமனி , ஜெயவீரசிகாமணி (கடலகப் பொறியியலாளர்), ரூபமணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பொன்மணி திருநாவுக்கரசு (நில அளவையாளர்), சந்திரபிரபா (லண்டன்), உமா (கனடா), அனந்தராஜ் (மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை), ஜெயக்குமார் (கனடா), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் Dr.கேதாரன் (வைத்திய அதிகாரி, **National Theque cleoring house - Jaffna**), சேந்தன் (பொறியியலாளர்), ஸ்கந்தன் (கனடா), நவஜீவன் (லண்டன்), நேசசிகாமணி (லண்டன்), சந்திரசிகாமணி (லண்டன்), ஈஸ்வரன்(லண்டன்), கீதா (லண்டன்), தேவகி (ஆசிரியை- வேம்படி மகளிர் கல்லூரி), மேகலா, கல்யாணி, பிரகதீஸ், அமுதீசன், அமிர்தபாசினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை உலகுடைப் பிள்ளையார் கோயில் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெனியம்பை,
வல்வெட்டித்துறை.

*தகவல்:*
*ந.ஜெயவீரசிகாமணி.*
*(மகன்)*

### முத்தையா பொன்னுத்துரை

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட இளைப்பாறிய ஆசிரியரும் மட்டுவில்தெற்கு,வேரற்கேணி கந்தசாமிகோயில் அறங்காவலருமான முத்தையா பொன்னுத்துரை 26.05.2007 சனிக்கிழமை காலை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற முத்தையா- இளையாச்சி தம்பதியரின்அன்புமகனும் பரராஜசிங்கம் (சட்டத்தரணி- லண்டன்), காலஞ்சென்றபாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் இந்திராதேவி, சிவராமச்சந்திரன் (இ.போ.ச-கோண்டாவில்),சந்திராதேவி (பிரான்ஸ்), கலாநிதி (ஆசிரியை- வவுனியாதமிழ் மத்தியமகாவித்தியாலயம்), அனுஷியாதேவி (இந்தியா), தயாநிதி(ஆசிரியை-மட்டுவில்தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகுதந்தையும் செவ்வந்திராஜா (இ.போ.ச- வவுனியா),தேவமனோகரி (ஆசிரியை-சாவகச்சேரி மகளிர்கல்லூரி) தேவன் (பிரான்ஸ்),குகநாதன் (வவுனியா), கமலேந்திரன்(இந்தியா),ஜெயானந்தா (மல்லாகம்) ஆகியோரின் அன்புமாமனும் சுஜித்தா,சிவோதயன், மகிழன், குணாளன்,சிவகரிஷன்,மஜூந்தினி, தனுஷன், சிந்தூரி,நிருத்திகன், நிர்த்தனன்,நவேதனன்,நிரோஷன்,நிரந்தரி,வித்தியாகன்ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு நேரியதுக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*பொ.சிவராமச்சந்திரன் (மகன்).*
*தொலைபேசி: 0777448470*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.